# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.101/2022

## அ.சா. 16 (LW )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திருமதி. பூங்கொடி** | **தொழில்** | |
| **த/க பெயர்** | | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **02.03.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 ,2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மதுரை அரசு ராஜாஜி அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் மூளை , நரம்பியல் அறுவை சிகிச்சை பிரிவில் உதவி பேராசியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.05.2021 அன்று மேற்படி மருத்துவமனையில் தலைக்காய பிரிவில் பணியிலிருந்த போது பன்னீர்செல்வம் , த/பெ.பழனிச்சாமி , மஞ்சம்பட்டி, மணப்பாறை, திருச்சி மாவட்டம், என்பவர் மேற்படி தேதியில் காலை 04.10 மணிக்கு சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார். நான் அவரை பரிசோதனை செய்த போது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது. மேற்படி நபர் திண்டுக்கல் அரசு மருத்துவமனையிலிருந்து எங்கள் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

**காயங்களின் விவரம்**

1) அவருக்கு இடது மார்பில் 10X 8 செமீ அளவில் தையலிடப்பட்ட காயம் இருந்தது.

மேற்படி நபர் மயக்க நிலையில் இருந்ததால் அவருக்கு மூளையை பரிசோதனை செய்ய

சிடி ஸ்கேன் எடுக்கப்பட்டது. கபால எலும்பில் எலும்பு முறிவும், மூளையில் பல இடங்களில் இரத்த கசிவும் இருப்பது கண்டறியப்பட்ட சிகிச்சை அளிக்கப்பட்டது. மேற்படி நபர் சிகிச்சையிலிருந்தவர் 08.05.2021 அன்று அதிகாலை 04.35மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். மேற்படி நபரின் இறப்பை நான் உறுதி செய்தேன். மேற்படி நபரின் இறப்பை உறுதி செய்து பிரேதத்தை சவக்கிடங்கிற்கு அனுப்பி வைத்தேன். நான் வழங்கிய இறப்பு உறுதிச் சான்று **அ.த.சா.ஆ. 11**ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1,2 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை:**

காயம்பட்டவருக்கு தலையில் வெளிப்புற காயங்கள் இல்லை என்றால் சரிதான். காயம்பட்டவருக்கு நான் பரிந்துரை செய்துதான் சிடி ஸ்கேன் எடுக்கப்பட்டது.

நான்தான் காயம்பட்டவருக்கு தலையில் அறுவை சிகிச்சை செய்தேன். அறுவை சிகிச்சையின் போது தலையில் இரண்டு எலும்புகளை அகற்றி விட்டேன். காயம்பட்டவருக்கு தலையில் என்ன சிகிச்சை தேவைப்பட்டதோ அதற்கு முறையாக சிகிச்சை செய்தேன். நான் சரிவர வைத்தியம் பார்க்கவில்லை என்பதால்தான் காயம்பட்டவர் இறந்து விட்டார் என்றால் சரியல்ல. இறந்தவர் மூளையில் இரத்தக்கசிவு ஏற்பட்டதால் இறந்து விட்டார். காயம்பட்டவருக்கு மூளையில் இரத்த கசிவை வெளியேற்ற வைத்தியம் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.03 15:28:04 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.